ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,890—1970 ජනවාරි 23 වැනි සිකුරාදා—1970.1.23

14,890 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு சனவரி மாதம் 23 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 45 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | 45 | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. ... | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | 46 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 49 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 54 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 50 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


### மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 24

ம. தே. அ. எண்; என். 126/69

விசாரணை ஆணைக்குழுக்கள் பற்றிய அதிகாரச் சட்டம் (393 ஆம் அத்தியாயம்) 19(1) ஆம் பிரிவின் கீழ், இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த திருவாளர் டெறிக் அலுவிஹாரே அவர்களை, 1969 திசெம்பர் 9 ஆம் திகதியிலிருந்து மேற் கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின் கீழ், 1969 திசெம்பர் 7 ஆம் திகதியில் நியமிக்கப்பட்ட உயர் கல்வி ஆணைக் குழுவின் செயலாளராக மகாதேசாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதி உத்தமரின் ஆணைப்படி,

நி. விஜேவர்தன,
மகாதேசாபதியின் செயலாளர்.

மகாதேசாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு சனவரி 9 ந் உ.

1–770

### அரசாங்க சேவை ஆணைக் குழுவின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 25

அரசாங்க சேவை ஆணைக்குழு பின்வரும் நியமனங்களைச் செய்துள்ளது :—

ஏ. 7/69.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட (காணித்துண்டு) மேற்பார்வையாளர் திரு. டீ. ஜீ. ஜயசூரிய 1969, யூன் மாதம் 1 ஆம் தேதி தொடக்கம் மறு அறிவித்தல் வரைக்கும் அம்பாறை நிருவாக மாவட்டத்திலுள்ள வெவகம பற்றுப் பகுதி இறைவரி உத்தியோகத்தராக பதில் கடமையாற்றுவார்.

ஏ. ஏ. 35/69.

திரு. எஸ். பொன்னம்பலம், உதவி நிலஅளவையாளர் தலைமை அதிபதி 19.7.1968 ல் இருந்து பிரதி நிலஅளவையாளர் தலைமை அதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏ. 20/67.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதில் சிரேட்ட வரிமதிப்பாளர் திரு. ரி. இரத்தினசுந்தரம் 1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆம் திகதியிலிருந்து சிரேட்ட வரிமதிப்பாளராகவும்,

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

ஏ. 20/67

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதில் சிரேட்ட வரிமதிப்பாளர் திருமதி எஸ். தர்மராஜா 1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆம் திகதியிலிருந்து சிரேட்ட வரிமதிப்பாளராகவும்,

ஏ. 20/67

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதில் சிரேட்ட வரிமதிப்பாளர் திருமதி எஸ். இராஜசிங்கம் 1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆம் திகதியிலிருந்து சிரேட்ட வரிமதிப்பாளராகவும்,

ஏ. 20/67

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிமதிப்பாளர் திரு. எம். எஸ். எம். ரி. சமரதுங்க 1969 ஆம் ஆண்டு செப்தம்பர் 1 ஆம் திகதியிலிருந்து சிரேட்ட வரிமதிப்பாளர் பதவியில் கடமை புரிவதற்கும், 1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆம் திகதியிலிருந்து சிரேட்ட வரிமதிப்பாளர் பதவியில் பதில் கடமை புரிவதற்கும்,

ஏ. 20/67

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிமதிப்பாளர் திரு. சி. ஜி. பெரேரா 1969 ஆம் ஆண்டு செப்தம்பர் 2 ஆம் திகதியிலிருந்து சிரேட்ட வரிமதிப்பாளர் பதவியில் கடமை புரிவதற்கும், 1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆம் திகதியிலிருந்து சிரேட்ட வரிமதிப்பாளர் பதவியில் பதில் கடமை புரிவதற்கும்,

ஏ. 20/67

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிமதிப்பாளர் திருமதி. கே. சிறிவர்தன 1969 ஆம் ஆண்டு செப்தம்பர் 15 ஆம் திகதியிலிருந்து சிரேட்ட வரிமதிப்பாளர் பதவியில் கடமை புரிவதற்கும், 1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆம் திகதியிலிருந்து சிரேட்ட வரிமதிப்பாளர் பதவியில் பதில் கடமை புரிவதற்கும்,

ஏ. 20/67

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிமதிப்பாளர் திரு. சி. டி. ஏ. குணவர்தன 1969 ஆம் ஆண்டு செப்தம்பர் 15 ஆம் திகதியிலிருந்து சிரேட்ட வரிமதிப்பாளர் பதவியில் கடமை புரிவதற்கும், 1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆம் திகதியிலிருந்து சிரேட்ட வரிமதிப்பாளர் பதவியில பதில் கடமை புரிவதற்கும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஏ. 8/69.

1969 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 1 ம் தேதி தொடக்கம் திரு. பி. என். குணசிங்க பதில் சுங்க உதவிச் சேகரிப்பாளராகக் கடமையாற்றுவார்.

ஏ. 8/69.

1969 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 1 ம் தேதி தொடக்கம் திரு. ஏ. எம். பி. ஜெயவர்தன பதில் சுங்க உதவிச் சேகரிப்பாளராகக் கடமையாற்றுவார்.

ஏ. 8/69.

1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ம் தேதி தொடக்கம் திரு. ஜி. எச். டி. வொஸ் பதில் சுங்க உதவிச் சேகரிப்பாளராகக் கடமையாற்றுவார்.

ஏ. 8/69.

1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ம் தேதி தொடக்கம் திரு. எம். எம். ஜி. பர்னண்டோ பதில் சுங்க உதவிச் சேகரிப்பாளராகக் கடமையாற்றுவார்.

ஏ. ஏ. 30/68.

1.11.69 ல் இருந்து திரு. ரி. டப்ளியூ. மெண்டிஸ் அவர்கள் மின்சார முயற்சிகள் திணைக்களப் பொது முகாமையாளராகக் கடமைபுரிவார்.

ஏ. 76/67.

சிவில் விமானப் போக்குவரத்து (விமான நிலையங்கள்) உதவிப் பணிப்பாளராகிய தளபதி சீ. எச். எஸ். அமரசேகரா தன் கடமைகளுடன், சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் திரு. டபிள்யூ. எல். பீ. த மெல் இத் தீவுக்கு வெளியிலிருக்கும் காலத்தில், சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளரும் இலங்கை விமானப் பதிவாளரும் என்ற பதவிக்குரிய கடமைகளை 1969, நவம்பர் 11 ஆம் தேதி தொடக்கம் 1969, நவம்பர் 23 ஆம் தேதி வரை கவனிப்பார்.

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
அ. அ. பெட்டி எண் : 500,
கொழும்பு 1,
1970.1.12.

1–860

## நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 26

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம | புதிய நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. பி. ஜி. எஸ். டேவிட் .. | இலங்கை நீதிச்சேவையில் விசேட தரத்திலும், மாத்தறை மாவட்ட நீதிபதி முதலியனவாகவும் | 1970 ஜனவரி 1 லிருந்து .. | மறு அறிவித்தல் வரை |
| திரு. பி. எஸ். டபிள்யு. அபயவர்த்தன | இலங்கை நீதிச் சேவையில் விசேட தரத்திலும், குருணகல் மாவட்ட நீதிபதி முதலியனவாகவும் | ஷை .. .. | ஷை |
| திரு. டி. விமலரட்ண ... | அவரது ஏனைய கடமைகளுடன் நீதிச் சேவை ஆணைக் குழுவின் செயலாளராக | 1969 டிசம்பர் 31 .. | அப்பதவியின் நிரந்தரச் செயலாளர் இல்லாத காலம் |
| திரு. எம். ஈ. தர்மவர்த்தன .. | நீதவான் முதலியனவாக, கேகாலே .. | 1970 ஜனவரி 1 லிருந்து .. | மறு அறிவித்தல் வரை |
| திரு. ஜி. ஜி. டி. டீ சில்வா .. | நீதவான் முதலியனவாக, பாணந்துறை | ஷை .. .. | ஷை |
| திரு. ஜே. ஜே. எவ். ஏ. டயஸ் .. | நீதவான் முதலியனவாக, யாழ்ப்பாணம் | ஷை .. .. | ஷை |
| திரு. எம். ஜமீல் .. .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியனவாக, கம்பக | ஷை .. .. | ஷை |
| திரு. ஜி. சி. டபிள்யு. டீ சில்வா .. | மாவட்ட நீதிபதி முதலியனவாக, தங்காலே | ஷை .. .. | ஷை |
| திரு. எம். பி. ஜி. திசநாயக்க .. | மாவட்ட நீதிபதி முதலியனவாக, மன்னார்–வவுனியா | ஷை .. .. | ஷை |
| திரு. ஆர். நவரட்ணம் .. | இலங்கை நீதிச் சேவையில் எண்ணின் மிக்க உத்தியோகத்தராக | ஷை .. .. | ஷை |
| திரு. எச். டபிள்யு. சேனநாயக்க .. | நீதவான் முதலியனவாக, அம்பாந்தோட்டை | ஷை .. .. | ஷை |
| திரு. எஸ். ஜே. டி. டீ எஸ். விஜயரட்ண | நீதவான் முதலியனவாக, பதுளை .. | ஷை .. .. | ஷை |
| திரு. ஜே. சேனாதிராஜா .. | நீதிவான் முதலியனவாக, காலி .. | ஷை .. .. | ஷை |
| திரு. கே. சுவர்ணதிபதி .. | நீதவான் முதலியனவாக, குருணகல் | ஷை .. .. | ஷை |
| திரு. எஸ். ஜோகனதன் .. | நீதவான் முதலியனவாக, பலப்பிட்டி | ஷை .. .. | ஷை |
| திரு. பி. பி. நம்புக்வெல்ல .. | நீதவான் முதலியனவாக, நீர்கொழும்பு | ஷை .. .. | ஷை |

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. பி. ஆர். சில்வா .. | இலங்கை நீதிச் சேவையில் எண்ணின் மிக்க உத்தியோகத்தராகவும், பலப்பிட்டி மேலதிக நீதவான் முதலியனவாகவும் | 1970 ஜனவரி 1 லிருந்து .. | மறு அறிவித்தல் வரை |
| திரு. ஏ. எச். ஈ. மொலமுரே .. | அனுராதபுர மேலதிக மாவட்ட நீதிபதி, பொலனறுவையில் | ஷை .. .. | ஷை |
| திரு. எம். எஸ். எஸ். கொரிய .. | மேலதிக நீதவான் முதலியன, மாத்தறை | ஷை .. .. | ஷை |
| திரு. வி. என். ஏ. டபிள்யு. விக்ரமசூரிய | குருணகல் மேலதிக நீதவான் முதலியன, குளியாப்பிட்டியில் | ஷை .. .. | ஷை |
| திரு. ஆர். நவரட்ணம் .. | பதில் மேலதிக நீதவான் முதலியன, கொழும்பு | 1970 ஜனவரி 1 லிருந்து 7 வரை | திரு. என். பி. டி. எஸ். விஜசேகர இல்லாத காலங்கள் |
| திரு. ஆர். நவரட்ணம் .. | கொழும்பு பதில் மேலதிக நீதவான் முதலியனவாக கொழும்பு நகர-நீதிமன்றத்தில் | 1970 ஜனவரி 8 லிருந்து 28 வரை | திரு. ஐ. ஜி. என். டீ ஜே. செனிவிரட்ண இல்லாத காலங்கள் |
| திரு. எம். பி. விஜசிங்க .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, அனுராதபுரம் | 1969 டிசம்பர் 29 லிருந்து .. | மறு அறிவித்தல் வரை |
| திரு. எம். எம். அப்துள்காதர் .. | அவரது ஏனைய கடமைகளுடன் களுத்துறை மேலதிக மாவட்ட நீதிபதி முதலியனவாக | 1970 ஜனவரி 26 லிருந்து .. | களுத்துறை மாவட்ட நீதிமன்ற எல்ஏ. 161 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. சி. அமெரசிங்க .. | அவரது ஏனைய கடமைகளுடன் குருணகல் மேலதிக நீதவான் முதலியனவாக குளியாப்பிட்டியில் | 1970 ஜனவரி 4 லிருந்து .. | குளியாப்பிட்டி நீதிமன்ற 40213,49207, 49531, 43295 ஆகிய இலக்க வழக்குகளில் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. எஸ். கனகரட்ணம் .. | மேலதிக நீதவான் முதலியன, யாழ்ப்பாணம் | 1969 டிசம்பர் 29 லிருந்து 31 வரை | திரு. எம். ஜமீல் இல்லாத காலங்கள் |
| திரு. டி. சென். ஈ. அமெரசிங்க .. | மேலதிக நீதவான் முதலியன, அவிசாவளை | 1969 டிசம்பர் 30 லிருந்து 1970 ஜனவரி 2 வரை | திரு. ஜே. ஜி. ஆசிர்வாதம் இல்லாத காலங்கள் |
| திரு. எல். டபிள்யு. பெர்னுன்டோ .. | கண்டி மேலதிக மாவட்ட நீதிபதி, கம்பளை முதலிய இடங்களில் | 1969 டிசம்பர் 21, 22, 28, 29, 30 ம், 1970 ஜனவரி 5, 6, 7 ம் | திரு. எல். ஏ. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. எம். ஜே. பீரிஸ் .. | மேலதிக நீதவான் முதலியன, பதுளை | 1969 டிசம்பர் 22 லிருந்து 29 வரை | திரு. ஜே. சேனுதிராஜா இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். எஸ். நம்பிகை .. | ஷை .. .. | 1969 டிசம்பர் 31 .. | ஷை |
| திரு. எல். எஸ். வி. பெரேரா .. | ஷை .. .. | 1970 ஜனவரி 1 ம், 2 ம் .. | திரு. எஸ். ஜே. டி. டீ எஸ். விஜயரட்ண இல்லாத காலங்கள் |
| திரு. எம். எல். என். விக்ரமசிங்க .. | மேலதிக நீதவான் முதலியன, காலி | 1969 ஜனவரி 3 .. | திரு. ஜே. சேனுதிருஜா இல்லாத காலம் |
| திரு. பி. வி. பொற்றேஜு .. | கொழும்பு மேலதிக சிறுவர் நீதவானுக பம்பலப்பிட்டியில் | 1969 டிசம்பர் 24 ம் 1970 ஜனவரி 6 ம் | திரு. எம். பி. சி. ரெட்ணம் இல்லாத காலங்கள் |
| திரு. பி. வி. பொற்றேஜு .. | மேலதிக விண்ணப்ப நீதிமன்ற ஆணையாளர், கொழும்பு | 1969 டிசம்பர் 27 லிருந்து 29 வரை | திரு. சி. ஈ. மென்டிஸ் இல்லாத காலங்கள் |
| திரு. எவ். டபிள்யு. குணரட்ண .. | மேலதிக நீதவான் முதலியன, நீர்கொழும்பு | 1969 டிசம்பர் 28 லிருந்து 31 வரை | திரு. எஸ். ஜே. டி. டீ. எஸ். விஜயரட்ண இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். மாதவருஜா .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, திருகோணமலை | 1969 டிசம்பர் 27 ம், 28 ம் .. | திரு. எம். பி. விஜசிங்க இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். மாதவருஜா .. | ஷை .. .. | 1970 ஜனவரி 3 .. | திரு. டி. சி. டபிள்யு. விக்ரமசேகர இல்லாத காலம் |
| திரு. டி. எஸ். எம். முஸ்தாப .. | மேலதிக நீதவான் முதலியன, கண்டி | 1969 டிசம்பர் 28, 30, 31 .. | திரு. எவ். ஜீ. பி.பெர்னுன்டோ இல்லாத காலங்கள் |
| திரு. எச். டி. ரணசிங்க .. | மேலதிக நீதவான் முதலியன, கம்பக | 1969 டிசம்பர் 26 ம், 27 ம் .. | திரு. ஜே. சி. ஏ. சி. எம். எஸ். சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. கே. ஈ. கதிர்காமலிங்கம் .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, யாழ்ப்பாணம் | 1969 டிசம்பர் 21 லிருந்து 26 ம், 30 லிருந்து 1970 ஜனவரி 3 வரையும் | திரு. ஆர். பரமகுரு இல்லாத காலங்கள் |
| திரு. சி. ஈ. பெரைரா .. | கொழும்பு மேலதிக நீதவானுக கொழும்புக் கோட்டை கூட்டு நீதிமன்றத்தில் | 1969 டிசம்பர் 27 லிருந்து 1970 ஜனவரி 2 வரை | திரு. எஸ். சேமசிங்க இல்லாத காலங்கள் |
| திரு. என். ஜே. வி. கூரே .. | மேலதிக நீதவான் முதலியன, கொழும்பு | 1969 டிசம்பர் 28 லிருந்து 31 வரை | திரு. ஏ. எச். ஈ. மொலமுரே இல்லாத காலங்கள் |
| திரு. டபிள்யு. ஜே. பொன்சேக .. | மேலதிக நீதவான் முதலியன, பாணந்துறை | 1969 டிசம்பர் 20 ம், 24 லிருந்து 31 வரையும் | திரு. ஜே. ஜே. எவ். ஏ. டயஸ் இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். எம். எம். காசீம் .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, புத்தளம் | 1969 டிசம்பர் 24 லிருந்து 1970 ஜனவரி 2 வரை | திரு. கே. பாலபிட்ணர் இல்லாத காலங்கள் |
| திரு. சி. தியாகருஜா .. | கண்டி மேலதிக மாவட்ட நீதிபதி, மாத்தளை முதலிய இடங்களில் | 1969 டிசம்பர் 28 லிருந்து 1970 ஜனவரி 2 வரை | திரு. எஸ். செல்லையா இல்லாத காலங்கள் |
| திரு. ஏ. சி. அமெரசிங்க .. | மேலதிக நீதவான் முதலியன, குருணகல் | 1969 டிசம்பர் 23 லிருந்து 26 வரை | திரு. எஸ். ஜோகனுதன் இல்லாத காலங்கள் |
| திரு. பி. ஜி. டீ சில்வா .. | மேலதிக நீதவான் முதலியன, அவிசாவளை | 1969 டிசம்பர் 20 லிருந்து .. | அவிசாவளை நீதிமன்ற 98215 இலக்க வழக்கில் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. என். எம். ஏ. டபிள்யு. விக்ரமசூரிய | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, தங்காலை | 1969 டிசம்பர் 20 .. | திரு. எம். ஈ. தர்மவர்த்தன இல்லாத காலம் |
| திரு. டி. சி. ஈ. வி. கருணரட்ண .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, நீர்கொழும்பு | 1969 டிசம்பர் 24 .. | திரு. ஜே. ஜி. எல். சுவரிஸ் இல்லாத காலம் |

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. எஸ். இளயதம்பி .. | யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் மல்லாகத்தில் | 1970 ஜனவரி 5 .. | திரு. எஸ். ஆனந்த குமார சுவாமி இல்லாத காலம் |
| திரு. ரி. எஸ். பி. டீ எஸ். குணசேகர .. | மேலதிக நீதவான் முதலியன, பலப்பிட்டி | 1969 டிசம்பர் 31 .. | திரு. பி. பி. நம்புக்வெல இல்லாத காலம் |
| திரு. எவ். ஆர். வீரசேகர .. | மேலதிக நீதவான் முதலியன, இரத்தினபுரி | 1969 டிசம்பர் 22 ம், 24 லிருந்து 1970 ஜனவரி 2 வரையும் | திரு. எல். எஸ். பெரேரா இல்லாத காலங்கள் |
| திரு. எம். எல். என். விக்ரமசிங்க .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, காலி | 1969 டிசம்பர் 24 .. | திரு. சி. வி. உடலகம இல்லாத காலம் |
| திரு. டபிள்யு. டி. பெரேரா .. | மேலதிக நீதவான் முதலியன, கொழும்பு | 1969 டிசம்பர் 21 .. | திரு. என். பி. டி. எஸ். விஜசேகர இல்லாத காலம் |
| திரு. ஏ. சீமாம்பிள்ளை .. | மேலதிக நீதவான் முதலியன, மன்னார் | 1970 ஜனவரி 4 லிருந்து 7 வரை | திரு. கே. வி. நவரட்ணம் இல்லாத காலங்கள் |
| திரு. ஆர். வி. வில்வருஜா .. | மேலதிக நீதவான் முதலியன, வவுனியா | 1969 டிசம்பர் 23 லிருந்து 25 வரை வரை | திரு. கே. சின்னத்தம்பி இல்லாத காலங்கள் |
| திரு. ஜி. சூரியஆராச்சி .. | குளியாப்பிட்டி காரியாதிகாரப் பிரிவு முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1969 டிசம்பர் 19 லிருந்து 22 ம், 24 ம் | திரு. எஸ். கடவத்த ஆராச்சி இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். ஆர். அபேவிக்ரம .. | கங்கபொடபற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்ற மேலதிக தலைவர் | 1969 டிசம்பர் 27 லிருந்து .. | கேகாலை ஊர் நீதிமன்ற 12805 இலக்க குற்றவியல் வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஐ. பெர்ணுன்டோ .. | பிற்றிகல் கோறளை வடக்கு முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1969 டிசம்பர் 26 .. | திரு. பி. ஜே. எஸ். ஏ. பெரேரா இல்லாத காலம் |
| திரு. எச். ஜி. பி. கருணரட்ண .. | பெந்தோட்டை-வலல்லா வீதிக் கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1969 டிசம்பர் 20 ம், 1970 ஜனவரி 8 ம் | திரு. எம். ஜே. ரி. சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். ஈ. பின்ரோ .. | புத்தளம் பற்று முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1969 டிசம்பர் 27 .. | திரு. பி. டி. பி. விஜசேகர இல்லாத காலம் |
| திரு. பி. என். பிரேமரட்ண .. | தேவமிதி அற்பற்று முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1969 டிசம்பர் 22 ம், 24 ம் .. | திரு. சி. ஏ. எஸ். ஈ. கிறிஸ்பின் இல்லாத காலங்கள் |
| திரு. ஆர். வி. வில்வருஜா .. | வவுனியா தெற்கு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1969 டிசம்பர் 24 .. | திரு. கே. சின்னத்தம்பி இல்லாத காலம் |
| திரு. கே. கணபதிப்பிள்ளை .. | தென்மாராட்சி முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1969 டிசம்பர் 7 .. | திரு. கே. சண்முகனுதன் இல்லாத காலம் |
| திரு. ஜி. சூரியஆராச்சி .. | வடைவிலி அற்பற்று முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1969 டிசம்பர் 19 லிருந்து 22 ம், 24 ம் | திரு. டி. பி. எல்லப்பொல இல்லாத காலங்கள் |
| திரு. எச். டபிள்யு. டி. என். வெதசிங்க | கடவத்தக் கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1969 டிசம்பர் 20 ம், 28 ம் .. | திரு. டபிள்யு. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. சி. இராசையா .. .. | தீவுகள் முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1969 டிசம்பர் 28, 29, 31 .. | திரு. எஸ். ராஜனுதன் இல்லாத காலங்கள் |
| திரு. சி. பி. தெகிகம .. | மாத்தளை தெற்கு ஊர்நீதிமன்ற பதில் தலைவர் | 1969 டிசம்பர் 28 ம், 29 ம் .. | திரு. கே. ஜி. ஜயசேன இல்லாத காலங்கள் |
| திரு. எம். எச். காரியப்பர் .. | கரவக்குப்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 ஜனவரி 2 லிருந்து 6 வரை | திரு. கே. நாகலிங்கம் இல்லாத காலங்கள் |
| திரு. ஏ. சீமாம்பிள்ளை .. | மன்னூர் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 ஜனவரி 5 ம், 6 ம் .. | திரு. கே. வி. நவரட்ணம் இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. ஈ. இலங்கன்திலக்க .. | தும்பனே முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1969 டிசம்பர் 29 ம், 31 ம் .. | திரு. ஏ. பி. அனுவிகார இல்லாத காலங்கள் |
| திரு. என். டபிள்யு. ருஜகருண .. | சியன்னக் கோறளை கிழக்கு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 ஜனவரி 4 லிருந்து 6 வரை | திரு. டபிள்யு. பி. தசநாயக்க இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். ஜே. அதப்பற்று .. | ஷை .. .. | 1970 ஜனவரி ம், 3ம் .. | ஷை |
| திரு. கே. ஏ. பிரேமதிரெட்ண .. | அளுத்குறு கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 ஜனவரி 2 .. | திரு. எம். ஏ. சீ. டீ சில்வா இல்லாத காலம் |

நீதிச் சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 573,
கொழும்பு 12,
1970 ம் ௵ ஜனவரி ௴ ૧ உ.

சிறிமெவன் அமெரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

1–761/1

---

இல. ஜே. எம்./ஜி. 75/66

1970 இன் இல. 27

## நீதிச்சேவை ஆணைக்குழுவினுல் நீக்கஞ்செய்யப்பட்ட நியமனம்

1969 டிசம்பர் 18, திரு. ஏ. பி. அனுவிகார இல்லாத காலத்திற்கு தும்பனே முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவராக நியமனஞ் செய்யப்பட்ட திரு. ஜே. ஈ. இலங்கன்திலக்காவின் நியமனம் நீக்கஞ் செய்யப்பட்டுள்ளது.

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. 573,
கொழும்பு 12,
1970 ம் ௵ ஜனவரி ௴ 6 ந் உ.

சிறிமெவன் அமெரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

1–761/2

## மற்றைய நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 28

இலங்கை நிருவாகச் சேவையில் பின்வரும் நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன :—

75/10/26 (எம்சீஎ)

இலங்கை நிருவாகச் சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஆர். ரி. இரத்தினதுங்க அவர்கள் தேசியமயச்சேவைகள் அமைச்சிலுள்ள தமது கடமைகளுடன், 1969 திசம்பர் மாதம் 15 ஆந் தேதி முதல் காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சிலும் கடமையாற்றுவார்.

75/2/4 (எம்சீஎ)

இலங்கை நிருவாகச் சேவையின் II ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஆர். எல். குணசேகர அவர்கள் 1969 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 12 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை தொழில் ஆணையாளராகக் கடமையாற்றுவார்.

75/10/90 (எம்சீஎ)

இலங்கை நிருவாகச் சேவையின் II ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ரி. ஆர். ஆர் விஜேவிக்கிரம அவர்கள் 1969 திசம்பர் மாதம் 12 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை பொதுத் திறைசேரியில் கடமையாற்றுவார்.

75/4/18/7 (எம்சீஎ)

இலங்கை நிருவாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எம். ரி. டபிள்யு. அமரசேகர அவர்கள் 1969 சனவரி மாதம் 20 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சில் உதவிச் செயலாளர்களுள் (இ. நி. சே. வகுப்பு III) ஒருவராகக் கடமையாற்றுவார்.

75/1/15 (எம்சீஎ) IV

இலங்கை நிருவாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. என். பீ. யெகநாதன் அவர்கள் 1969 மே மாதம் 4 ஆந் தேதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கப்படும்வரை அரசாங்க மின்சக்தித் திணைக்களத்தில் பிரதான நிருவாக உத்தியோகத்தராகக் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஆர். ஜி. கோமஸ் அவர்கள் 1969 செத்தெம்பர் மாதம் 2 ஆந் தேதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கப்படும்வரை கைத்தொழில், கடற்றொழில் அமைச்சில் பிரதிப்பணிப்பாளர் (கொள்கை) ஆகக் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. டபிள்யு. எம். சீ. டபிள்யு. எம். அபோன்சோ அவர்கள் 1969 மே மாதம் 3 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை அரசாங்கக் கட்டுவேலைத் திணைக்களத்தில் பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்) ஆகக் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. என். டபிள்யு. எச். டி. குணரத்தின அவர்கள் 1969 மே மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை ஏற்றுமதி, இறக்குமதிப் பிரதிக் கட்டுப்பாட்டாளர்களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. டபிள்யு .டபிள்யு. ஜே. மெண்டிஸ் அவர்கள் 1969 மே மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கூட்டுறவு அபிவிருத்திப் பிரதி ஆணையாளர்களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எ. மதீன் அவ கள் 1969 மே மாதம் 1 ஆந் தேதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கப்படும்வரை கண்டி நிருவாக மாவட்டத்தின் இணை அரசாங்க அதிபராக, சொல்லப்பட்ட மாவட்டத்தின் நிர்வாகியாகிய அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ரி. சாமுவேல் தம்பையா அவர்கள் 1969 மே மாதம் 1 ஆந் தேதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கப்படும்வரை காணி அபிவிருத்திப் பிரதிப் பணிப்பாளராகக் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. டி. ஆர். சீ. கன்வல அவர்கள் 1969 மே மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை மோட்டார் போக்குவரத்து ஆணையாளராகவும் மோட்டார் வாகனப் பதிவாளராகவும் கடமையாற்றுவார்.

75/1/15 (எம்சீஎ) IV

இலங்கை நிருவாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. பி. கே. அபேரத்தின அவர்கள் 1969 மே மாதம் 1 ஆந் தேதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கப்படும்வரை பிரதிக் காணி ஆணையாளராகக் கடமையாற்றுவார்.

75/3/23(எம்சீஎ)

இலங்கை நிருவாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. டபிள்யு. எம். சீ. டபிள்யு. எம். அபோன்சோ அவர்கள் 1969 ஒற்றோபர் மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை இத்தீவு முழுவதற்கும் பிரதி உணவு ஆணையாளர்களுள் ஒருவர், உணவு வழங்கல் பிரதிப் பணிப்பாளர்களுள் ஒருவர், பிரதி உணவுக் கட்டுப்பாட்டாளர்களுள் ஒருவர், பிரதி (உணவு) விலைக்கட்டுப்பாட்டாளர்களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

75/3/6 (எம்சீஎ).

இலங்கை நிருவாகச் சேவையின் IV ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ரி. டி. எல். பீரிஸ் அவர்கள் 1969 செத்தெம்பர் மாதம் 11 ஆந் தேதி முதல் 1969 செத்தெம்பர் மாதம் 30 ஆந் தேதி வரை கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் கடமையாற்றுவார்.

75/4/18/13 (எம்சீஎ).

இலங்கை நிருவாகச் சேவையின் IV ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எ. எல். பி. கே. பெரேரா அவர்கள் 1969 நவம்பர் மாதம் 2 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கைத்தொழில், கடற்றொழில் அமைச்சில் உதவிச் செயலாளர்களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

75/1/23 (எம்சீபி) VI

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எவ். ஜயகொட அவர்கள் 1969 ஏப்பிரல் மாதம் 3 ஆந்தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கமத்தொழில் திணைக்களத்தில் நிருவாக உத்தியோகத்தர்களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எவ் ஜயகொட அவர்கள் 1969 ஏப்பிரல் மாதம் 20 ஆந் தேதிமுதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை சௌக்கிய அமைச்சில், சௌக்கியச் சபையின் பதவி உதவியாளராகவும், செயலாளராகவும் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. கே. கே. டி. ஓ. ஆர். த சில்வா அவர்கள் 1969 ஏப்பிரல் மாதம் 3 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கனிட்ட பல்கலைக்கழகக் கல்லூரியொன்றின் செயலாளர்களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

75/1/3/8/9 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. சீ. எச். எம். ரி. சந்திரசேகர அவர்கள் 1969 யூன் மாதம் 25 ஆந் தேதி முதல் 1969 யூலை மாதம் 18 ஆந் தேதிவரை கைத்தொழில், கடற்றொழில் அமைச்சில் கடமையாற்றுவார்.

75/1/23/6 (எம்சீபி) II

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஆர். கே. எச். எம். பர்ளுந்து அவர்கள் 1969 செத்தெம்பர் மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கேகாலை நிருவாக மாவட்டத்திலுள்ள வெலிகல் கோறளையின் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தராகக் கடமையாற்றுவார்.

75/1/13/1 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. டபிள்யு. பி. சோமரத்தின அவர்கள் 1969 மே மாதம் 7 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கல்வி, பண்பாடு அலுவல்கள் அமைச்சில் கடமையாற்றுவார்.

75/10/554 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எஸ். தியாகராசா அவர்கள் 1969 செத்தெம்பர் மாதம் 16 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை ஆயுள்வேதத் திணைக்களத்தில் கடமையாற்றுவார்.

75/10/883 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எம். திசநாயக்க அவர்கள் 1969 செத்தெம்பர் மாதம் 30 ஆந் தேதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கப்படும்வரை சௌக்கிய அமைச்சில் கடமையாற்றுவார்.

75/10/1146 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. டபிள்யு. பி. சோமரத்தின அவர்கள் 1969 ஒற்றோபர் மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை பொதுத்திறைசேரியில் சிரேட்ட தொழில் தொடர்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றுவார்.

75/10/849 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எஸ். ஆர். பர்ளுந்து அவர்கள் 1969 ஒற்றோபர் மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை தேசீய வீடமைப்பு உதவி ஆணையாளர்களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எல். எல். வி. பெரேரா அவர்கள் 1969 ஒற்றோபர் மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை உதவி இறப்பர் கட்டுப்பாட்டாளர்களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

75/10/365 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. வீ. சி. கருணானந்த அவர்கள் 1969 ஒற்ரோபர் மாதம் 7 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை (அத். 463) காணி நிர்ணயச் சட்டத்தின் பிரிவு 3 (1) இன் கீழ் உதவி நிருணய உத்தியோகத்தர்களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

75/5/25 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஜே. ஜி. கீர்த்திரத்தின அவர்கள் 1969 நவம்பர் மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

75/5/8 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ரி. உருத்திரமூர்த்தி அவர்கள் 1969 நவம்பர் மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை மட்டக்களப்பு நிருவாக மாவட்டத்தின் நிருவாகியான அரசாங்க அதிபருக்கு அலுவலக உதவியாளராக கடமையாற்றுவார்.

75/1/23/6 (எம்சீபி) II

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஆர். கே. எச். எம். பர்ளுந்து அவர்கள் 1969 நவம்பர் மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கேகாலை நிருவாக மாவட்டத்திலுள்ள தெகிகம்பல் கோறளை, பத புலத்கம ஆகியவற்றின் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தராகக் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. டி. பி. வியனகெதர அவர்கள் 1969 நவம்பர் மாதம் 1 ஆந் தேதி முதல் மறுக்கட்டளை பிறப்பிக்கப்படும்வரை கேகாலை நிருவாக மாவட்டத்திலுள்ள பெலிகல் கோறளையின் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தராகக் கடமையாற்றுவார்.

75/1/14/2 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஐ. விக்கிரமசிங்க அவர்கள் 1969 திசம்பர் மாதம் 2 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை உள்ளூராட்சி அமைச்சின் உள்ளூராட்சிப் பகுதியில் கடமையாற்றுவார்.

எம். இராசேந்திரா,
திறைசேரிச் செயலாளர்.

நிதி அமைச்சு, கொழும்பு,
1970 ம் ஆண்டு சனவரி மீ 10 ந் வ.

1–760

## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டீ. ஓ. 27/64.

### 1969 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கத் தப்பியோடிய ஆட்கள் சட்டம்

1 ஆம் பிரிவின்கீழான கட்டளை

1969 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கத் தப்பியோடிய ஆட்கள் சட்டத்தின் 1 ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் டட்லி செல்ரன் சேனநாயக்க ஆகிய நான் இந்தக் கட்டளையால் 1970 ஜனவரி, 11 ஐ, மேற் சொன்ன சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியாக நியமிக்கிறேன்.

டட்லி சேனநாயக்க,
பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1970 ஜனவரி, 11.

1–852/1

எல். டீ. ஓ. 27/64.

### அறிவித்தல்

1946 ஆம், 1947 ஆம் ஆண்டின் இலங்கை (அரசமைப்புச் சுதந்திரமும்) அரசவைக் கட்டளைகளின் 46 (4) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ், டட்லி செல்ரன் சேனநாயக்க, பிரதம அமைச்சர் ஆகிய நான், இவ்வறிவித்தல் கொடுத்த திகதியிலிருந்து, பிரதம அமைச்சரும் பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சரும் என்ற முறையில் 1969 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, தப்பியோடிய ஆட்கள் சட்டத்தின் விடயங்களையும் கடமைகளையும் எனது பொறுப்பில் ஏற்றுள்ளேன் என்பதும், அதன் பிரகாரம் அப்பிரிவின் கீழ் 14,724/3 ஆம் இலக்க 1966 திசெம்பர் 2 ஆம் திகதிய கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டதும், காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறானதுமான அறிவித்தலானது, " பிரதம அமைச்சரும் பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சரும் " என்ற தலைப்பின் கீழ் " விடயங்களும் கடமைகளும் " என்ற நிரையில் " 1969 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, தப்பி ஓடிய ஆட்கள் சட்டத்தை நிருவகித்தல் " என்ற சொற்களைச் சேர்ப்பதன் மூலம் மேலும் திருத்தப்படுகிறது என்பதும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

டட்லி சேனநாயக்க,
பிரதம அமைச்சர்.

பிரதம அமைச்சர் அலுவலகம்,
கொழும்பு 1,
1970, ஜனவரி 11.

1–852/2

ச.வ.பீ. 7/63

### 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம்

16 அ என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்

1969 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 16அ என்னும் பிரிவின்படி எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நிதி அமைச்சர், உக்கு பண்டா வன்னிநாயக்க ஆகிய நான், இதற்குள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள நிறுவனமொவ்வொன்றையும் அப்பிரிவின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அறநிலையம் ஒன்றென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகிறேன்.

யு. பி. வன்னிநாயக்கா,
நிதியமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு சனவரி மீ 12 ந் வ.

அட்டவணை

1. வீரகொட ஸ்ரீ விஜயனந்தாராம விஹார நன்மைபுரிக் கழகம்.
2. விசாகா வித்தியாலயத்தின் கட்டட நிதி.

1–762

இல. இடி 04/001.(11)

### 1963 இன் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்

பிரிவு 58 (4) (எ) இன் கீழான கட்டளை

நிதி அமைச்சர், உக்கு பண்டா வன்னிநாயக்கா ஆகிய நான், 1963 இன் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் (4) (எ) என்னும் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பண்பால், இதனகத்துள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் வகுப்பினை அல்லது விவரணத்தினை முற்கூறிய பிரிவின் (1), (2), (3) ஆகிய உட்பிரிவுகளின் நோக்கங்களுக்காக இக் கட்டளையின் மூலம் குறித்துரைக்கின்றேன் ; அத்துடன்

2. 1969 ஆம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் 17 ஆந் தேதிய இல. 14,876 ஐக் கொண்ட கசெற்றில் வெளியிடப்பட்ட 1963 இன் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 58 ஆம் பிரிவின் ( ) (எ) ஆகிய உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை இத்தால் நீக்கஞ் செய்கின்றேன்.

யு. பி. வன்னிநாயக்கா,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஜனவரி மீ 10 ந வ.

அட்டவணை

1. ஒல்லாந்து, றொற்றர்டாம், " மார்க்கா " (மாற்ஸ் சாப்பிஜ் ரொப்பீர் வான் ஆண்டிலென் இன் இண்டஸ்றியேஸ் ஒன்டெர்நிமிங்கென்) என். வி., என்பதற்கு மாற்றப்படவுள்ளதும், கம்பர்க், மாக்கறின் யூனியன் ஜி. எம். பி. எச். என்பதனால் தற்போதைக்கு வைத்திருக்கப்படுவதுமான சீய் ரீ லிமிற்றெட்டிலுள்ள ஒவ்வொன்றும் 10 ரூபா பெறுமதியான இரண்டு பங்குகள்.

2. ஒல்லாந்து, றொற்றர்டாம், " மாவிபெல " (மாற்ஸ்சாப்பிஜ்வூர் இன்ரர்நாசனல் பெலிகிஞ்சென்) என். வி. என்பதற்கு மாற்றப்படவுள்ளதும், கம்பர்க், சீயரீ இம்போட் ஜி. எம். பி. எச். அன்ட் கோ என்பதனால் தற்போதைக்கு வைத்திருக்கப்படுவதுமான சீயர் லிமிரெட்டிலுள்ள ஒவ்வொன்றும் 10 ரூபா பெறுமதியான 5,22,455 பங்குகள்.

1–779

## தபாற் கந்தோர் கட்டளைச் சட்டம்

அரசாங்க கட்டுவேலை, தபால் தந்தி தொலை செய்திப் போக்குவரத்து அமைச்சர் வால்டர் ஜெவ்ரி மொண்டேகு ஜயவிக்கிரமா ஆகிய நான் நிதி அமைச்சரின் ஒருப்பாட்டுடன் (190 ம் அத்தியாயமான) தபாற் கந்தோர் கட்டளைச் சட்டத்தின் 44 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, 1968 நவம்பர் 22 ம் தேதிய 14,829 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் கூறப்பட்டுள்ள பணிக்கொடை விகிதத்துக்குப் பதிலாக, தபாற் கந்தோரின் சார்பில் ஏற்றிச் செல்வதற்கு அவ் அதிபர்களினால் ஏற்கப்படும் தபாற் பொருட்கள் சம்பந்தமாக இவ்வட்டவணையில் கூறப்பட்டுள்ள விகிதப்படி பணிக்கொடைகள் அளிக்கப் படுதல் வேண்டுமென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகிறேன்.

டப்ளியு. ஜே. எம். ஜயவிக்கிரம,
அரசாங்க கட்டுவேலை, தபால் தந்தித்
தொலைசெய்திப் போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 29 ந் உ.

**அட்டவணை**

| சேருமிடம் | 16 பைகளைக் கொண்ட கூறு ஒன்றிற்கான கடிதத்தபால் கள் (40 கன அடிக்குச் சமனாகும்) | | | 7 பைகளைக் கொண்ட கூறு ஒன்றிற்கான பார்சல்கள் தபால்கள் (40 கன அடிக் குச் சமனாகும்) | | | 16 பைகளைக் கொண்ட கூறு ஒன்றிக்கான வெற்றுத் தபால் பைகளை (40 கன அடிக் குச் சமனாகும்) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (அ) | ப. | சி. | பெ. | ப. | சி. | பெ. | ப. | சி. | பெ. |
| ஐக்கிய இராச்சியம் .. | 20 | 2 | 0 | 13 | 8 | 0 | 13 | 8 | 0 |
| மாசேல்ஸ் .. | 20 | 2 | 0 | 13 | 8 | 0 | 13 | 8 | 0 |
| ஜெனேவா .. | 20 | 2 | 0 | 13 | 8 | 0 | 13 | 8 | 0 |
| போட்செய்டும் சுவேசும் | 20 | 2 | 0 | 13 | 8 | 0 | 13 | 8 | 0 |
| இத்தாலி .. | 20 | 2 | 0 | 13 | 8 | 0 | 13 | 8 | 0 |
| போட்சூடான் .. | 17 | 6 | 0 | 11 | 10 | 0 | 11 | 10 | 0 |
| ஏடன் .. | 17 | 6 | 0 | 11 | 10 | 0 | 11 | 10 | 0 |
| தன்சியஸ் .. | 21 | 14 | 0 | 14 | 10 | 0 | 14 | 10 | 0 |
| ஜிப்ரோல்டர் .. | 21 | 14 | 0 | 14 | 10 | 0 | 14 | 10 | 0 |
| மோல்ரா .. | 25 | 18 | 0 | 17 | 6 | 0 | 17 | 6 | 0 |
| பினாங் .. | 6 | 2 | 6 | 4 | 1 | 6 | 4 | 1 | 6 |
| சிங்கப்பூர் .. | 7 | 6 | 0 | 4 | 17 | 6 | 4 | 17 | 6 |
| கொங்கொங் .. | 8 | 12 | 0 | 5 | 14 | 6 | 5 | 14 | 6 |
| ஷாங்காய் .. | 11 | 19 | 0 | 7 | 19 | 6 | 7 | 19 | 6 |
| சைகோன் .. | 9 | 14 | 0 | 6 | 9 | 6 | 6 | 9 | 6 |
| யப்பான் .. | 12 | 14 | 0 | 8 | 9 | 6 | 8 | 9 | 6 |
| அவுஸ்திரேலியா .. | 12 | 10 | 3 | 8 | 7 | 3 | 8 | 7 | 3 |
| பிலிப்பைன்ஸ் .. | 12 | 0 | 6 | 8 | 0 | 6 | 8 | 0 | 6 |
| | டொலர் | சதம் | | டொலர் | சதம் | | டொலர் | சதம் | |
| ஐக்கிய அமெரிக்க நாடு .. | 82 | 25 | | 54 | 50 | | 54 | 50 | |

ஒவ்வொரு பைக்குமான கட்டணமானது, கடிதத் தபால்களாயிருப்பின் கூறு, ஒன்றுக்கான வீதத்தின் 1/16 பங்கும், பார்சல் தபால்களாயிருப் பின் கூறு ஒன்றுக்கான வீதத்தின் 1/7 பங்கும், வெற்றுப் பைகளைக் கொண்ட பைகளாயிருப்பின் கூறு ஒன்றுக்கான வீதத்தின் 1/16 பங்கு மாகும்.

(ஆ) மாலைதீவுக்களுக்கு வள்ளங்கள் மூலம் :—

| | |
|---|---|
| கடிதங்களும் தபால் அட்டை களும் | ஒரு இறுத்தலுக்கு 50 சதவீதம் |
| பார்சல் | .. ஒரு இறுத்தலுக்கு 05 சதவீதம் |
| மற்றைய பொருட்கள் | .. ஒரு இறுத்தலுக்கு 05 சதவீதம் |

1–694

---

## சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

**அறிவித்தல்**

சவுளி உற்பத்தித் தொழிற் சம்பளச் சபையில் வேலைக்கமர்த்துபவர்களின் பிரதிநிதியாயிருந்த திரு. எ. எ. இரசல் என்பவர் காலம்சென்றமையால் அவருக்குப் பதிலாக உறுப்பினராயிருத்தற்கு திரு. பீ. இராஜாராம் என்பவரை, (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 9 ம் பிரிவிற்கமைய கனம் தொழில், தொழில் வசதி அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டின் சம்பளச் சபை ஒழுங்கு விதிகளின் 26 ம் ஒழுங்கு விதியின்படி இத்தால் அறிவிக்கப் படுகிறது.

ஜீ. பீ. தம்பையா,
நிரந்தரச் செயலாளர்,
தொழில், தொழில் வசதி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு சனவரி மீ 9 ந் உ.

1–766

## திருகோணமலை மாவட்டத்திலுள்ள கொட்டியார் பற்றுக் காரியாதிகாரியின் பகுதியைப் பிரித்தல்

1970 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கொட்டியார் பற்று பிரிவுக் காரியாதிகாரியின் பகுதி, மூதூர் பிரிவுக் காரியாதிகாரியின் பகுதி, சேருவில பிரிவுக் காரியாதி காரியின் பகுதி எனப்படும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதென் பதை இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது :

2. மூதூர் பிரிவுக் காரியாதிகாரியின் பகுதி பின்வரும் கிராம சேவை யாளரிகளின் பிரிவுகளைக் கொண்டதாகவிருக்கும்.

| பகுதி இல. | பெயர் |
|---|---|
| 216 .. | தோப்பூர் |
| 218 .. | மல்லிகைத்தீவு |
| 219 .. | பள்ளிக்குடியிருப்பு |
| 220 .. | சம்பூர் |
| 221 .. | கூனித்தீவு |
| 222 .. | கட்டைப்பறிச்சான் |
| 223 .. | மூதூர் (தமிழ்) |
| 224 .. | மூதூர் (முஸ்லிம்) |

சேருவில பிரிவுக் காரியாதிகாரியின் பகுதி பின்வரும் கிராம சேவை யாளர்களின் பிரிவுகளைக் கொண்டதாகவிருக்கும்.

| பகுதி இல. | பெயர் |
|---|---|
| 214 .. | ஈச்சலம்பத்தை |
| 215 .. | சேருவில |
| 217 .. | தெகிவத்தை |

3. பின்வரும் உள்ளூராட்சிச் சபைகளின் பிரதேசங்கள் இப்புதிய பிரிவுக் காரியாதிகாரிகளின் பகுதிகளுள் அடங்கும் :

(அ) **மூதூர் பிரிவுக் காரியாதிகாரியின் பகுதி**—
1. தோப்பூர் கிராமச் சபை
2. மல்லிகைத்தீவு கிராமச் சபை.
3. சம்பூர் கிராமச் சபை.
4. கட்டைப்பறிச்சான் கிராமச் சபை.
5. மூதூர் பட்டின சபை.

(ஆ) **சேருவில பிரிவுக் காரியாதிகாரியின் பகுதி**—
1. ஈச்சிலம்பத்தைக் கிராமச் சபை.
2. சேருவில கிராமச் சபை.
3. தெகிவத்தைக் கிராமச் சபை.

4. இப்புதிய பிரிவுக் காரியாதிகாரிகளின் பகுதிகளுள் பின்வரும் கிராமக் கோடுகள் நீதி பரிபாலனம் செய்வனவாகும் :

(அ) **மூதூர் பிரிவுக் காரியாதிகாரியின் பகுதி**—
1. மூதூர் கிராமக் கோடு.
2. தோப்பூர் கிராமக் கோடு.

(ஆ) **சேருவில பிரிவுக் காரியாதிகாரியின் பகுதி**—
1. ஈச்சிலம்பத்தை கிராமக் கோடு.
2. தோப்பூர் கிராமக் கோடு.

5. இப்புதிய பிரிவுக் காரியாதிகாரிகளின் பகுதிகள் பின்வரும் தேர்தல் மாவட்டங்களுள் அமைந்துள்ளன :

(அ) **மூதூர் பிரிவுக் காரியாதிகாரியின் பகுதி**—
1. மூதூர் தேர்தற் தொகுதி.

(ஆ) **சேருவில பிரிவுக் காரியாதிகாரியின் பகுதி**—
1. மூதூர் தேர்தற் தொகுதி.

6. ஒவ்வொரு புதிய காரியாதிகாரியினதும் அலுவலகம் பின்வரும் ஸ்தானங்களில் அமைந்திருக்கும்:

(அ) **மூதூர் பிரிவுக் காரியாதிகாரியின் பகுதி**—மூதூர்.

(ஆ) **சேருவில பிரிவுக் காரியாதிகாரியின் பகுதி**—அலி ஒளுவா.

அ. எ. கோகளி மொறகொட,
நிரந்தரக் காரியதரிசி,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு சனவரி மீ 10 ந் உ.

1–763

## இணக்கச்சபைகள் சட்டம்

### 3 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப்பேரவைக் கட்டளையின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1969 ஜனவரி 13 ஆந் தேதிய 14,836/3 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச்சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (2) உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், மொஹமது ஹனிபா மஹ்மூது நெயினா மரிக்காராகிய யான், இதற்குள்ள அட்டவணையிற் குறிப்பிட்டுள்ள இடப்பரப்பு ஒவ்வொன்றுக்கும் இணக்குவோர் குழாம் ஒவ்வொன்றினைஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும், அத்தகைய இடப்பரப்பு ஒவ்வொன்றினதும் இணக்குவோர் குழாத்துக்கு நியமிக்கப்படவேண்டிய ஆட்களைப் பற்றி 1970 பெப்புரவரி 28 ஆந் நாள் அல்லது அதற்கு முன்னர் அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழான விதப்புரைகள், பெரும்பாக அரசிறை அலுவலரின் அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவத்தில் எழுத்தில் எனக்குச் செய்யப்படலாமெனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

எம். எச். எம். நெயினா மரிக்கார்,
நீதி அமைச்சரின்
பாராளுமன்றச் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 ஜனவரி 10 ஆம் நாள்.

அட்டவணை

1. புத்தளம் சிலாபம் மாவட்டத்திலுள்ள ஓதர பலாதெற்கு கிராமப் பகுதி.
2. புத்தளம் சிலாபம் மாவட்டத்திலுள்ள ஓதர பலாத வடக்குக் கிராமப்பகுதி.
3. புத்தளம் சிலாபம் மாவட்டத்திலுள்ள தங்கொட்டுவைப் பட்டின சபைப்பகுதி.
4. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வேலணைக்கிராமப் பகுதி.
5. திருகோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாய்க் கிராமப் பகுதி.
6. திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர்ப் பட்டினசபைப் பகுதி.
7. குருநாகலை மாவட்டத்திலுள்ள ஹிரிப்பிட்டிக் கிராமப் பகுதி.
8. கேகாலை மாவட்டத்திலுள்ள அதுளுகமைக் கிராமப் பகுதி.

1–696

---

## இணக்கச்சபைகள் சட்டம்

1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1969 சனவரி 13 ஆந் திகதிய 14,836/3 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச்சபைகள் சட்டத்தின் 4 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு, நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், மொஹமது ஹனிபா மஹ்மூது நெயினா மரிக்காராகிய யான் காலி மாவட்டத்திலுள்ள பலப்பிட்டிப் பட்டின சபைப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் தலைவராகவிருந்து, விலகிய, பலப்பிட்டி, வெலிதறையைச் சேர்ந்த றிச்மண்ட் த சொய்சா குணவர்தன அவர்களுக்குப் பதிலாக, பலப்பிட்டி, பிரதான வீதி "சிறிநகர்" இலுள்ள மல்லியாவடு என்ட்றூ நிகலஸ் சீசர் த சில்வா அவர்களை மேற்குறிப்பிட்ட இணக்கச்சபையின் அங்கத்தவராகப் பதவி வகிக்கும் காலத்துள் அதன் தலைவராக இத்தால் நியமிக்கின்றேன்.

எம். எச். எம். நெயினா மரிக்கார்,
நீதி அமைச்சரின்
பாராளுமன்றச் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 சனவரி 10 ஆம் நாள்.

1–695

## இணக்கச்சபைகள் சட்டம்

### கட்டளை

1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47(2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1969 ஜனவரி 13 ஆந் தேதிய 14,836/3 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 ஆம் ஆண்டின் 12 ம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4( 1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர் மொஹமது ஹனிபா மஹ்மூது நெயினா மரிக்கார் ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1969.6.6 ஆம் தேதிய 14,857 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 4 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட அத்துருகிரிய கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன் :—

1. ஹோகந்தர, ஹோகந்தர வடக்கு, "ஷாந்தி"யில் வசிக்கும் திரு. தொன் எட்மன்ட் வானகுரு.
2. ஹோமாகம, தெடிகமுவ, வெலிபில்லேவ, ஸ்ரீ சுமன மாவத்தையைச் சேர்ந்த திரு. கொலம்பகே தொன் ஜேமிஸ் வில்பிரட் சுமணசேக்கர.
3. அத்துருகிரிய, போறே, 311 இலக்க இல்லத்தில் வசிக்கும் திரு. கால்லகே தொன் மொன்ற் பெரேரா.
4. அத்துருகிரிய, 263/2 ஆம் இலக்க, "புபுது"ல் வசிக்கும் திரு. தலகலகே ஜான் ஜயவர்தன.
5. அத்துருகிரிய, 1 ஆம் இலக்க இல்லத்தில் வசிக்கும் திரு. றொபர்ட் ஜயதிலக்க.
6. அத்துருகிரிய, 519 ஆம் இலக்க, "சுனேத்ரா"வில் வசிக்கும் திரு. தொன் கருணாரத்ன சேனாதீர.
7. அத்துருகிரிய, 7 ஆம் இலக்க, "சந்திரிக்கா"வில் வசிக்கும் திரு. தொன் பவ்லிஸ் சேனாநாயக்க.
8. பன்னிபிட்டிய, கலல்கொடையைச் சேர்ந்த திரு. பலிஹ தெரு ஆறச்சிகே மாட்டின் பெரேரா.
9. ஹோகந்தர, ஹோகந்தர தெற்கு, 102 ஆம் இலக்க இல்லத்தில் வசிக்கும் திரு. அன்ஹெட்டிகே ஜோன் பெரோரா விஜேரத்ன.
10. பன்னிபிட்டிய, கொட்டாவ வடக்கு, 1557 ஆம் இலக்க இல்லத்தில் வசிக்கும் திரு. கபடாகே தொன் வில்லியம் குணரத்ன.
11. பன்னிபிட்டிய, கொட்டாவ வடக்கு, 1,600 ஆம் இலக்க இல்லத்தில் வசிக்கும் திரு. அனுத்கே தொன் கருண சேக்கர.
12. பன்னிபிட்டிய, கொட்டாவ தெற்கு, பழைய வீதி, 454ஆம் இலக்க இல்லத்தில் வசிக்கும் திரு. தொன் ஹென்திரிக் கன்னங்கர.
13. பன்னிபிட்டிய, கொட்டாவ தெற்கு, பழைய வீதி, 383 ஆம் இலக்க இல்லத்தில் வசிக்கும் திரு. ஹெட்டிகே தோமஸ் அபேசிங்ஹ வீரகோன்.
14. பன்னிபிட்டிய, கொட்டாவ தெற்கு, 527 ஆம் இலக்க இல்லத்தில் வசிக்கும் திரு. தொன் ஹரி வில்பிரட் றண சிங்ஹ.
15. பன்னிபிட்டிய, ருக்மலே, "வீரசெவன"வில் வசிக்கும் திரு. வீரக்கொடிகே கர்னேலிஸ் அல்விஸ்.
16. பன்னிபிட்டிய, ருக்மலேயைச் சேர்ந்த திரு. ஹெட்டி ஆறச்சிகே தொன் பத்மசேன.
17. பன்னிபிட்டிய, மாகும்புர, பிங்ஹேனவைச் சேர்ந்த திரு. தொன் சைமன் றணசிங்ஹ.
18. மாலபே, ஹோகந்தர வடக்கு, 228 ஆம் இலக்க இல்லத்தில் வசிக்கும் திரு. வீரகலகே தொன் அர்னேலிஸ்.
19. ஹோகந்தர, ஹோகந்தர வடக்கு, "ஸ்ரீயானி"யில் வசிக்கும் திரு. ஹத்தமுணகே தொன் சந்திரசோம குணவர்தன.
20. முல்லேகம, ஹபரகடவைச் சேர்ந்த திரு. கும்புஹேனகே தொன் பெம்பி விஜேதுங்க.
21. ஹோமாகம, ஹபரகடவைச் சேர்ந்த திரு. சுகததாஸ கொத்தலாவல.
22. முல்லேகம, "சிங்ஹகிரி"யில் வசிக்கும் திரு. தொன் சுபனேரிஸ் வெத்தசிங்ஹ.
23. முல்லேகமவைச் சேர்ந்த திரு. தொன் எம்லிஸ் பத்ம பெறும.
24. ஹோமாகம, பனாகொட, ஹைய் லெவல் வீதி, 4 ஆம் இலக்க இல்லத்தில் வசிக்கும் திரு. தொன் மாட்டின் அல்விஸ் ஜயசிங்ஹ.

25. மீகொட, பனுகொட, திக்ஹெதெம்மவைச் சேர்ந்த திரு. றஞ்சித் தர்மசிறி வித்தான.

26. ஹோமாகம, பிட்டிபன வடக்கு, 484 ஆம் இலக்க இல்லத்தில் வசிக்கும் திரு. வெடிப்புலி அச்சிகே தொன் வாரிஸ் சிஞ்ஞோ.

27. ஹோமாகம, மாவத்தகம, "குணசெவன" வில் வசிக்கும் திரு. தொன் குணேரிஸ் சுதசிங்ஹ.

28. ஹோமாகம, உடுவனவைச் சேர்ந்த திரு. ஹுலத்துவகே தொன் சுகதன்.

29. பன்னிபிட்டிய, ஹிரிபிட்டிய, இல. 80 ஏ யைச் சேர்ந்த திரு. உடுவனகே ஜயசேன.

30. பன்னிபிட்டிய, நியதகல, 123 ஆம் இலக்க இல்லத்தில் வசிக்கும் திரு. மித்திரபால உக்வத்த.

31. பன்னிபிட்டிய, மாடுல்கொட, "வெதமெதுர"வில் வசிக்கும் திரு. கமஅச்சிவிதானலாகே ஆர்தர் பெரோ.

32. ஹோமாகம, பிராஹ்மணவத்த, கொஸ்வெற்றியன வீதியைச் சேர்ந்த திரு. தொன் புண்ணியசோம விக்கிரம சிங்ஹ.

33. ஹோமாகம, பிட்டிபன தெற்கு, தொலஹேனவைச் சேர்ந்த திரு. தொன் தர்மசிறி ராஜா கலுகப்புகே.

34. பன்னிப்பிட்டி ருக்மலேயைச் சேர்ந்த திரு. அபேசிங்க வீரக்கோன் கெற்றிகே பிரான்சிஸ் கோமஸ்.

(ஆ) ஹோகந்தர, ஹோகந்தர வடக்கு, "ஷாந்தி"யில் வசிக்கும் தொன் எட்மன்ட் வானகுரு அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் முற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

எம். எச். எம். நெயினு மரிக்கார்,
நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஒக்தோபர் மீ 20 ந உ.

1–777

---

## திருத்தம்

### இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரச பேரவைக் கட்டளை, 1946

1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) பேரவைக் கட்டளையின் 10 (3) ஆம் இலக்கப் பிரிவின்கீழ், தேர்தல் தொகுதி இல.77—உடுவில் சம்பந்தமாக 1965 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதிவெளியான 14,604 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையை இதன்கீழ்ச் சொல்லப்பட்டவாறு திருத்தியமைத்து வாசித்தல்வேண்டும்.

(அ) சம்மதிச் சீட்டும் பகுதி "ஏ" யின் விவரணத்தைக் கீழ்வருமாறு வாசித்தல் வேண்டும் :—

வலிகாமம் மேற்குப் பிரிவின், ஆனைக்கோட்டை கிராம சேவையாளரின் பிரிவைச் சேர்ந்த மானிப்பாய் கிராம சபையின் 5 ஆம், 6 ஆம் வட்டாரங்களடங்கிய ஆனைக்கோட்டைக் கிராமத்தின் பகுதியும், யாழ்ப்பாணம் மாநகர சபையின் 20 ஆம் வட்டாரத்தின் ஓர் சிறு பகுதியடங்கிய ஆனைக்கோட்டைக் கிராமத்தின் ஓர் பகுதியும்.

(ஆ) சம்மதிச் சீட்டும் பகுதி "ஏஏ" யின் விவரணத்தில் "இணுவில் கிராம சேவையாளரின் பிரிவைச் சேர்ந்த" என்ற சொற்களுக்குப் பதிலாகத் "தாவடிக் கிராம சேவையாளரின் பிரிவைச் சேர்ந்த" என்ற சொற்களை இடவும்.

(இ) சம்மதிச் சீட்டும் பகுதி "பீபீ" யின் விவரணத்தில் "இணுவில் கிராம சேவையாளரின் பிரிவைச் சேர்ந்த" என்ற சொற்களுக்குப் பதிலாகத் "தாவடிக் கிராம சேவையாளரின் பிரிவைச் சேர்ந்த" என்ற சொற்களை இடவும்.

சி. கந்தசாமி,
உதவிப் பதியும் உத்தியோகத்தர்,
தேர்தல் தொகுதி இல. 77—உடுவில்.

தேர்தல் அலுவலகம்,
கச்சேரி,
யாழ்ப்பாணம், 18.12.1969.

1–698

---

## 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டம்

### 25 (1) ஆம் பிரிவின் கீழ் கட்டளை

1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டம் 25 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, தேசியமய சேவைகள் அமைச்சர், விதான ஆராய்ச்சிகே சுகததாசாவாகிய நான், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அலுவல்களின் நோக்கத்திற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறித்துக் காட்டப்பட்டுள்ள அசைவற்ற ஆதனத்தின் உத்தேச வாங்குதலை இக்கட்டளை மூலம் அனுமதிக்கிறேன்.

வீ. ஏ. சுகததாசா,
தேசியமய சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஜனவரி மீ 8 ந உ.

#### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை (மேற்கு) டி. ஆர். ஓ. பகுதி, தலங்கமை பட்டண சபை எல்லைக்குட்பட்ட தலங்கமை (வடக்கு) கிராம சேவகர் பிரிவிலுள்ள தலங்கமை (வடக்கு) எனும் கிராமத்தில் அமைந்துள்ள கிட்டத்தட்ட 1 ஏ., 1 றூ., 0 பேர். விஸ்தீரணமுள்ள இரண்டு அடுத்துள்ள காணித்துண்டுகள்.

**காணித்துண்டு "ஏ"—எல்லைகள் :**

வடக்கு : பத்தரமுல்லை – கடுவெலை பிரதான வீதி ;

கிழக்கு : தலங்கமை, கொஸ்வத்தையைச் சேர்ந்த டொக்டர் பீ. சி. பெரேரா உரிமைகோரும் சொத்து ;

தெற்கு : அதே காணியின் பகுதி ;

மேற்கு : மீகொடை, தலகேனையைச் சேர்ந்த டி. டி. டி. ஜயசூரியா உரிமைகோரும் சொத்து.

**காணித்துண்டு "பி"—எல்லைகள் :**

வடக்கு : அத்துறுகிரியா மாலபே பிரதான வீதியும் அதே காணியின் பகுதியும் ;

கிழக்கு : அதே காணியின் பகுதி ;

தெற்கு : அதே காணியின் பகுதி ;

மேற்கு : மாலபே, உடவத்த தலங்கமையைச் (வடக்கு) சேர்ந்த சிறில் சேனநாயக்காவும் இந்திரசேன சேனநாயக்காவும் உரிமை கோரும் சொத்து.

2. வாங்கவேண்டிய காணித்துண்டுகளின் விவரங்கள் பின்வருமாறு :—

**காணித்துண்டு "ஏ"**

காணியின் பெயர் : தொம்பகஹாவத்தை ;
விவரணம் : இறப்பர், தென்னை தோட்டக் காணி ;
விஸ்தீரணம் : 0 ஏ., 2 றூ., 20 பேர். ;
உரிமைகோருபவர்களின் பெயர்களும் விலாசங்களும் :—(1) சிறில் சேனநாயக்கா, (2) இந்திரசேன சேனநாயக்கா, உடவத்தை, தலங்கமை (வடக்கு), மாலபே.

**காணித்துண்டு "பி"**

காணிப் பெயர் : தொம்பகஹாவத்தை ;
விவரணம் : இறப்பர் தோட்டம் ;
விஸ்தீரணம் : 0 ஏ., 2 றூ., 20 பேர். ;
உரிமைகோருபவரின் பெயரும் விலாசமும் : டொக்டர் பீ. சி. பெரேரா, கொஸ்வத்தை, தலங்கமை.

1–305

## 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டம்

### 25 (1) ஆம் பிரிவின் கீழ் கட்டளை

1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டம் 25 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, தேசியமய சேவைகள் அமைச்சர் விதான ஆராய்ச்சிகே சுகததாசாவாகிய நான், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அலுவல்களின் நோக்கத்திற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள அசைவற்ற ஆதனத்தின் உத்தேச வாங்குதலை இக்கட்டளை மூலம் அனுமதிக்கிறேன்.

வீ. ஏ. சுகததாச,
தேசியமய சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு சனவரி மீ 6 ந் உ.

அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை (மேற்கு) டி. ஆர். ஓ. பகுதி, அத்துருகிரியா பட்டண சபை எல்லைக்குட்பட்ட கொட்டாவை கிராம சேவகர் பிரிவிலுள்ள கொட்டாவை எனும் கிராமத்தில் அமைந்துள்ள கிட்டத்தட்ட 0 ஏ. 2 றூ. 36 பேர். விஸ்தீரணமுள்ள மூன்று அடுத்துள்ள காணித்துண்டுகள்.

**காணித்துண்டு " ஏ "**

எல்லைகள்.—

வடக்கு : பின்வருவோர் உரிமைகோரும் சொத்துக்கள் :—
1. திரு. இரத்தினசிரி விக்கிரமநாயக்கா (பா.உ.) ஹொரணை.
2. திரு. டி. ஈ. அமரசேகரா, கின்டல்பிட்டி, மில்லாவை.

கிழக்கு : பின்வருவோர் உரிமைகோரும் சொத்துக்கள் :—
1. திரு. டி. ஈ. அமரசேகரா, கின்டல்பிட்டி, மில்லாவை.
2. டி. கே. விக்கிரமசிங்கா, 128, ஹைலெவல் வீதி, பன்னிப்பிட்டி.

தெற்கு : அதே காணியின் பகுதி ;

மேற்கு : பின்வருவோர் உரிமைகோரும் சொத்துக்கள் :—
1. திருமதி. டி. ஈ. எஸ். அமரசேகரா, இல. 622, அத்துருகிரியா வீதி, கொட்டாவை.
2. திரு. இரத்தினசிரி விக்கிரமநாயக்கா, (பா.உ), ஹொரணை.

**காணித்துண்டு " பி "**

எல்லைகள்.—

வடக்கு : ஹொரணை பாராளுமன்ற உறுப்பினர் திரு. இரத்தினசிரி விக்கிரமநாயக்கா உரிமைகோரும் சொத்து ;
கிழக்கு : மில்லாவை, கின்டல்பிட்டியைச் சேர்ந்த திரு. டி. ஈ. அமரசேகரா உரிமைகோரும் சொத்து ;
தெற்கு : கொழும்பு-ஹோமகமை பிரதான வீதி ;
மேற்கு : அதே காணியின் பகுதி.

**காணித்துண்டு " சி "**

எல்லைகள்.—

வடக்கு : அதே காணியின் பகுதி ;
கிழக்கு : மில்லாவை, கின்டல்பிட்டியைச் சேர்ந்த திரு. டி. ஈ. அமரசேகரா உரிமைகோரும் சொத்து ;
தெற்கு : கொட்டாவை, அத்துருகிரியா வீதி 622 ஆம் இலக்கத்தில் வசிக்கும் திருமதி டி. ஈ. எஸ். அமரசேகரா உரிமைகோரும் சொத்து ;
மேற்கு : அதே காணியின் பகுதி.

2. வாங்கவேண்டிய காணித்துண்டுகளின் விவரங்கள் பின்வருமாறு :—

**காணித்துண்டு " ஏ "**

காணிப் பெயர் : கொடபறகஹாவத்தை ;
விவரணம் : தென்னங் காணி ;
விஸ்தீரணம் : 0 ஏ. 2 றூ. 0 பேர்.
உரிமைகோருபவரின் பெயரும் விலாசமும் : டி. ஈ. அமரசேகரா, கின்டல்பிட்டி, மில்லாவை.

**காணித்துண்டு " பி "**

காணிப் பெயர் : கொடபறகஹாவத்தை ;
விவரணம் : தென்னங் காணி ;
விஸ்தீரணம் : 0 ஏ. 0 றூ. 26 பேர்.
உரிமை கோருபவரின் பெயரும் விலாசமும் : திருமதி. டி. ஈ. எஸ். அமரசேகரா, இல. 622, அத்துருகிரியா வீதி, கொட்டாவை.

**காணித்துண்டு " சி "**

காணிப் பெயர் : கொடபறகஹாவத்தை ;
விவரணம் : தென்னங் காணி ;
விஸ்தீரணம் : 0 ஏ. 0 றூ. 10 பேர்.
உரிமைகோருபவரின் பெயரும் விலாசமும் : இரத்தினசிரி விக்கிரமநாயக்கா, பா.உ., ஹொரணை.

1–606

---

## 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டம்

### 25 (1) ஆம் பிரிவின் கீழ் கட்டளை

1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டம் 25 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, தேசியமய சேவைகள் அமைச்சர் விதான ஆராய்ச்சிகே சுகததாசாவாகிய நான், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அலுவல்களின் நோக்கத்திற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள அசைவற்ற ஆதனத்தின் உத்தேச வாங்குதலை இக்கட்டளை மூலம் அனுமதிக்கின்றேன்.

வீ. ஏ. சுகததாசா,
தேசியமய சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு சனவரி மீ 6 ந் உ.

அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை (கிழக்கு) டி. ஆர். ஓ. பகுதி, பாதுக்கை வக கிராமச் சபை எல்லைக்குட்பட்ட பாதுக்கை கிராம சேவகர் பிரிவிலுள்ள பாதுக்கை என்னும் கிராமத்தில் அமைந்துள்ள கிட்டத்தட்ட 2 ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஓர் காணித் துண்டு.

எல்லைகள் :—

வடக்கு : கொழும்பு–இங்கிரியா பிரதான வீதி ;
கிழக்கு : மொறகஹாத்தென்ன வித்தியாச்சந்திர பிரிவேணு வளவு ;
தெற்கு : பாதுக்கை கிராமச் சபை வீடமைப்புத் திட்டம் ;
மேற்கு : " சேனநாயக்க பிளேஸ் ".

2. வாங்கவேண்டிய காணித் துண்டின் விவரம் பின்வருமாறு :—

காணிப் பெயர் : மொறகஹாத்தென்ன ;
விவரணம் : தென்னங் கன்றுத் தோட்டம்.
விஸ்தீரணம் : கிட்டத்தட்ட 2 ஏக்கர்.

உரிமை கோருபவர்களின் பெயர்களும், விலாசங்களும் :—(1) கியூ. டி. பத்மபெருமா, கலகெதறை, பாதுக்கை ; (2) பீ. டி. பத்மபெருமா, கலகெதறை, பாதுக்கை.

1–604

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## உத்தரவாணைகள் வழங்குதலும் உத்தரவாணைகள் புதுப்பித்தலும்

### வட்டுவாய்க்கால் மீன்பிடிப் பிரமாணங்கள்—1970/71

1957 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ந் தேதியின் 11,103 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரமான பிரமாணங்களின் 2 ம், 11 ம் பிரமாணங்கள் சார்பாக.

கூறப்பட்ட பிரமாணங்களின் 3 ம் பிரமாணத்தின் கீழ் தகைமையுடைய யாவரும் 1970 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ந் தேதிக்குப் பிந்தாமல், கடற்றொழில் இயக்குநர், கடற்றொழில் ஆராச்சி நிலையம், கொழும்பு 3, என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். முல்லைத்தீவு கடற்றொழில் அலுவலகத்திலும், முல்லைத்தீவு, கள்ளப்பாடு, வட்டுவாய்க்கால் கிராம சேவையாளர்களிடமிருந்தும் பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பிக்க வேண்டும். **1970 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ந் தேதிக்குப் பின்னர்** கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஐ. ஓ. கே. ஜி. பர்னந்து,
கடற்றொழில் இயக்குநர்.

கொழும்பு 3,
1970 ம் ஆண்டு சனவரி மீ 9 ந் உ.

1–796

## காலி மாவட்டத்தில் கங்கபொட பத்துப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பகுதியைத் திருத்தியமைத்தல்

1970 பெப்ருவரி மாதம் 1 ஆந் தேதி முதல் காலி மாவட்டத்தில் கங்கபொட பத்துப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பகுதி கங்கபொட பத்து தெற்கு, கங்கபொட பத்து வடக்கு என இரு பகுதி களாகப் பிரிக்கப்பட்டுள்ளனவென்பதைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு இத்தால் அறிவிக்கின்றேன்:—

2. (அ) கங்கபொட பத்து தெற்குப் பெரும்பாக இறைவரி உத்தி யோகத்தரின் பகுதி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராம சேவகர்களின் பிரிவுகளைக் கொண்டதாயிருக்கும் :

| பிரிவு இல. | | கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 94 பி | .. | பொல்கஹவில |
| 184 | .. | பத்தேகம வடக்கு |
| 186 | .. | பத்தேகம கிழக்கு |
| 187 | .. | பொரளுகட |
| 188 | .. | ஹம்மாலிய |
| 189 | .. | மாபொட்டுவன |
| 190 | .. | இகல லேல்வல |
| 191 | .. | பகல லேல்வல |
| 192 | .. | அம்பேகம |
| 193 | .. | திவிதுற |
| 196 | .. | பாத்த வெலிவிட்டிய |
| 197 | .. | அகளிய |
| 198 | .. | கணேகம வடக்கு |
| 199 | .. | ஹல்பாத்த |
| 200 | .. | மெத கீம்பிய |
| 201 | .. | கொரதேவல |
| 202 | .. | மாஜுவான |
| 203 | .. | கினிமெல்லகஹ கிழக்கு |
| 204 | .. | தெலிக்கட |
| 205 | .. | ஹொரகம்பிட |
| 206 | .. | வல்பிட்ட வடக்கு |
| 206 ஏ | .. | வல்பிட்ட தெற்கு |
| 207 | .. | இகல கீம்பிய |
| 208 | .. | பகல கீம்பிய |
| 220 | .. | கணேகம தெற்கு |
| 221 | .. | வந்துறம்ப |
| 223 | .. | எத்கந்துற |

(ஆ) கங்கபொட பத்து வடக்குப் பெரும்பாக இறைவரி உத்தியோகத் தரின் பகுதி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராம சேவகர்களின் பிரிவுகளைக் கொண்டதாயிருக்கும்—

| பிரிவு இல. | | கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 194 | .. | உட வெலிவிட்டிய |
| 209 | .. | யட்டலமத்த |
| 210 | .. | உடலமத்த |
| 210 ஏ | .. | கோனதெனிய |
| 211 | .. | உணன்விட்டிய |
| 212 | .. | கெப்பிட்டியாகொட |
| 213 | .. | பறண தானயங்கொட |
| 214 | .. | அளுத் தானயங்கொட இகல |
| 215 | .. | அளுத் தானயங்கொட பகல |
| 216 | .. | நாகல்ல |
| 217 | .. | கோனலகொட |
| 218 | .. | உடுகம மேற்கு |
| 219 | .. | உடுகம கிழக்கு |
| 222 | .. | ஊறல |

3. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராம சபைப் பிரதேசங்கள் அவ்வப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்களின் பகுதிகள் அடங்கும் :—

(அ) கங்கபொட பத்து தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத் தரின் பகுதி—

பத்தேகம கிராமசபை

வந்துறம்ப கிராமசபை

வெலிவிட்டிய திவிதுற கிராமசபை

தெலிக்கட மாஜுவான கிராமசபை

(ஆ) கங்கபொட பத்து வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத் தரின் பகுதி—

நாகொட கிராமசபை

யட்டலமத்த கிராமசபை

உடுகம கிராமசபை

4. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராமக் கோடுகள் அவ்வப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்களின் பகுதிகளில் நீதி செலுத்தும் :—

(அ) கங்கபொட பத்து தெற்குப் பெரும்பாக இறைவரி உத்தியோ கத்தரின் பகுதி—

பத்தேகம கிராமக்கோடு

நாகொட கிராமக்கோடு

(ஆ) கங்கபொட பத்து வடக்குப் பெரும்பாக இறைவரி உத்தியோ கத்தரின் பகுதி—

நாகொட கிராமக்கோடு

5. கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாராளுமன்ற வாக்காளர் தொகுதிகள் அவ்வப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்களின் பகுதிகளுள் அடங்கும் :—

(அ) கங்கபொட பத்து தெற்குப் பெரும்பாக இறைவரி உத்தியோ கத்தரின் பகுதி—

இல. 57 பெந்தற எல்பிட்டிய (பகுதி)

இல. 59 பத்தேகம (பகுதி)

(ஆ) கங்கபொட பத்து வடக்குப் பெரும்பாக இறைவரி உத்தியோ கத்தரின் பகுதி—

இல. 58 ஹினிதும (பகுதி)

6. இப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்களின் அலுவலகங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஸ்தானங்களில் அமைந்துள்ளன :—

(அ) கங்கபொட பத்து தெற்குப் பெரும்பாக இறைவரி உத்தியோ கத்தரின் அலுவலகம்—

பத்தேகம

(ஆ) கங்கபொட பத்து வடக்குப் பெரும்பாக இறைவரி உத்தியோ கத்தரின் அலுவலகம்—

நாகொட

அ. எ. கொகளி மொறகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்நாட்டு விவகார அமைச்சு.

உள்நாட்டு விவகார அமைச்சு,
கொழும்பு 7,
1970 ம் ௵ சனவரி ௴ 12 ந் வ.

1–850

---

## 1968 ம் ஆண்டின் 48 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் (திருத்த) செய்சட்டத்தினுல் திருத்தப்பட்டபடியான நீர்ப்பாய்ச்சற் கட்டளைச் சட்டம் (அதிகாரம் 453)

கமநலச்சேவை பதில் ஆணையாளர், எறிக் ஜக்சன் த சில்வா, ஆகிய நான் 1968 ஆம் ஆண்டின் நீர்ப்பாய்ச்சல் (திருத்த) 48 ஆம் இலக்கச் செய் சட்டத்தினுல் திருத்தப்பட்டபடியான நீர்ப்பாய்ச்சற் கட்டளைச் சட்டம்

அதிகாரம் 453 இன் (இலங்கைச் சட்ட வாக்கங்கள் படி கண்டி அரசாங்க அதிபரால் 1968 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க நீர்ப்பாய்ச்சற் (திருத்தம்) செய்சட்டத்தின் 17 ஆம் பிரிவினுல் திருத்தப்பட்டபடியான மேற்சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப் பட்டதும் கீழ்க்குறிக்கப்பட்டிருப்பதுமான திட்டம் என்னுல் அங்கீகரிக்கப்ப டுள்ளது என்பதை இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

ஈ. ஜே. த சில்வா,
பதில் கமநலச்சேவை ஆணையாளர்.

1969 ம் ஆடு ஜூலை மீ 14 ந் உ.

**சிறிய நீர்ப்பாய்ச்சல் வேலைகளைத் திருத்துவதற்கான திட்டம்**

1. வேலையின் பெயரும் விவரணமும்: வக்கி அல்ல திட்டம் ஜே/21 (13.30 × 6.85).

2. இத்திட்டத்தின் கீழ் நீர்ப்பாய்ச்சக்கூடிய காணியின் தன்மையும் அளவும் தனியாருக்குச் சொந்தமான காணி: 70 அண்ணளவான ஏக்கர் அளவு.

முடிக்குரிய காணி :—அண்ணளவான ஏக்கர் அளவு.

3. ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் :

(1) கீழே தரப்பட்ட மிக முக்கியமான கட்டட வேலைகளை, அதாவது—

(அ) அணைக்கட்டு கட்டுதல்.

(ஆ) வாய்க்கால் திருத்துதல்.

(இ) பாதுகாப்பு கட்டுக்கட்டுதல்.

மதிப்பிடப்பட்ட செலவாகிய ரூபா 11,500 வரைக்கும் அரசாங்கத் தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(2) மேற்சொன்னவாறு அரசாங்கம் பொறுப்பேற்றமைக்குக் கைம் மாருக காணித்துண்டு பெற்றவரும் குடிநில உரிமையுள்ள விவசாயிகளும் எக்காணியிலும் காணி பெற்றவரோ குடிநில உரிமையுள்ள விவசாயிகளோ இல்லாதவிடத்து அக்காணிகளின் சொந்தக்காரர்கள், இக்கட்டட வேலைகள் முடிந்ததன்பின் எதுவித வேதனமுமின்றி இவற்றை பேணுவதற்கும் திருத்துவ தற்குமான கூலியாளர்களைக் கொடுத்துதவ வேண்டும்.

(3) இத்திட்டத்தின் கீழ் தங்கள் பங்கைச் செலுத்துவதில் காணித் துண்டு பெற்றவரோ குடிநில உரிமையுள்ள விவசாயியோ, இவர்களில்லாது விடத்துக் காணியின் சொந்தக்காரரோ தவறு வாராயின் இப்படியான வேலையை வேறு ஒருவரைச் செய்ய அரசாங்க அதிபர் பணித்து இதனுல் ஏற்படும் செலவினை இக் கட்டளைச் சட்டத்தின் VII ஆம் பாகத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அறவிடலாம்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.**

*இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. மேற் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைத்த அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட* **வேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| சனவரி .. .. | 2.1.70 | வெள்ளி .. | 26.12.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 9.1.70 | வெள்ளி .. | 2. 1.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 16.1.70 | வெள்ளி .. | 8. 1.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 23.1.70 | வெள்ளி .. | 16. 1.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 29.1.70 | வியாழன் .. | 21. 1.70 | புதன் | ந. ப. | 12.00 |
| பெப்புருவரி .. | 5.2.70 | வியாழன் .. | 28. 1.70 | புதன் | பி. ப. | 3.30 |
| | 13.2.70 | வெள்ளி .. | 5. 2.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | 20.2.70 | வெள்ளி .. | 13. 2.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 27.2.70 | வெள்ளி .. | 20. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| மாச்சு .. .. | 5.3.70 | வியாழன் .. | 27. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 13.3.70 | வெள்ளி .. | 5. 3.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 20.3.70 | வெள்ளி .. | 13. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 26.3.70 | வியாழன் .. | 20. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி, கொழும்பு.
1969 ஆம் ஆண்டு திசெம்பர் மீ 12 ஆந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகன்.*

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.